" ඉරිදා තිනකරන් " - 2018 දෙසැම්බර් මස 16 වෙනිදා

**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை**

**மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

# அறிவித்தல்

**1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை சட்டத்திற்கு அமைவானதாக இலங்கையில், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழில் துறையுடன் தொடர்புற்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை சீர்படுத்தும் மற்றும் நிர்வகிக்கும் ஏக ஒழுங்குபடுத்தல் அமைப்பாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை விளங்குகின்றது.**

முறைகேடான பணப்பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வதைத்தடுப்பது மீதான சட்ட ரீதியான கட்டமைப்பைப் பலப்படுத்தும் நோக்குடன், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கம், நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழாக பிரசுரமான 2018.01.10 திகதியிடப்பட்ட 2053/20ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி மூலம் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை சட்டத்தின் மூலம் உள்வாங்கப்படும் உலோகங்கள் மற்றும் இரத்தினக்கற்களுக்கு மட்டுப்படுத்தப்படாததும் அவற்றை உள்ளடக்கியதுமான, பெறுமதிமிக்க உலோகங்களின் விற்பனையாளர்கள் மற்றும் பெறுமதியான மற்றும் பகுதி பெறுமதியான (Semi - Precious) இரத்தினக்கற்களின் விற்பனையாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை, முறையான ஆவணத்திலான படிவத்தில் பெற்றுக்கொள்ளவும், வாடிக்கையாளர்கள் மற்றும் பயனாளர்கள் (உரிமையாளர்கள்) மீதான கவனயீர்ப்புக் கணிப்பொன்றை (Customer Due Diligence, CDD) நடாத்துவது கட்டாயமாகும்.

(அ) முழுப் பெயர்:

(ஆ) நிரந்தர வதிவிடம் அல்லது தபால் முகவரி:

(இ) தொழில், தொழில் வழங்குநரின் பெயர், வியாபாரம் அல்லது பிரதான செயற்பாடு;

(ஈ) ஒரு உத்தியோக பூர்வ ஆள் அடையாள அட்டை இலக்கம் அல்லது தேசிய அடையாள அட்டை போன்ற வாடிக்கையாளர் அல்லது பயனாளரின் ஒரு புகைப்படத்தைக் கொண்டிருக்கும் எந்தவொரு அடையாள ஆவணம்:

(உ) பிறந்த திகதி:

(ஊ) இனம்:

(ஐ) நிதி மூலங்கள்:

(ஒ) கொடுக்கல் வாங்கலின் குறிக்கோள்:

மேலும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையால் வழங்கப்படும் ஒவ்வொரு இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தினதும் 15ஆம் இலக்க நிபந்தனை மற்றும் ஒவ்வொரு விற்பனையாளர் அனுமதிப்பத்திரத்தினதும் 7, 8 மற்றும் 9ஆம் நிபந்தனைகளால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரால் மேற்கொள்ளப்படும் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவுள்ள அறிக்கைகளை, அதிகார சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் தம்மிடமும் வைத்திருக்க வேண்டியது கட்டாயமாகும்.

அதனால், இத்தால் அனைவருக்கும் அறிவித்துக் கொள்ளப்படுவதாவது, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையால் வழங்கப்படும் ஓர் அனுமதிப்பத்திரத்தின் கீழாக, இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் துறை மற்றும்/ அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும், அனைத்துக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகளையும் அனைத்து விடயங்களையும் தம்மிடம் வைத்திருக்க வேண்டியதுடன், வேண்டப்படும் போது அதிகார சபைக்கு அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

☛ மேற்படி சட்டரீதியான ஏற்பாடுகளை மீறும் எச்சந்தர்ப்பத்திலும் அது தொடர்பான தகுந்த சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு அதிகார சபையானது நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி**

**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை**

**இல. 25, கோல்பேஸ்டெரஸ், கொழும்பு-03.**

**தொலைபேசி : 0112329295, 2325364, 2390645-8 பெக்ஸ் : 0112320758**

**இணையம் : www.ngja.gov.lk**